FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 3rd Term Examination - 2022

| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவம் Christianity | Three Hours / Gr -12 (2022) | 43 | T | I,II |

### பகுதி – I

❖ **மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்து தரப்பட்ட புள்ளடித்தாளில் புள்ளடி இடுக.**

01. திருமறை நூல்கள் வடிவம் பெற்றது
    1) மனிதனின் ஆற்றலால்
    2) தூய ஆவியாரின் பலத்தால்
    3) இறைவாக்கினரின் ஊக்கத்தால்
    4) திருவிவிலிய வல்லுநர்களால்
    5) குலமுதுவர்களின் வழிகாட்டலால்

02. பலஸ்தீனாவில் உள்ள மிக உயரமான நகரம்
    1) எகிப்து
    2) அசீரியா
    3) கானான்
    4) எபிரோன்
    5) பபிலோனியா

03. இஸ்ராயேல் மக்கள் பாலைவனத்தில் பயணித்த காலம்
    1) 70 வருடங்கள்
    2) 35 வருடங்கள்
    3) 40 வருடங்கள்
    4) 50 வருடங்கள்
    5) 10 வருடங்கள்

04. கலப்பு சமய வழிபாட்டார்களைத் தென் அரசின் தூய இனத்தவர் ………… என்னும் கௌரவமற்ற பெயரினால் அழைக்கப்பட்டவர்கள்
    1) சமாரியர்கள்
    2) பரிசேயர்கள்
    3) எஸ்சேனியர்கள்
    4) சதுசேயர்கள்
    5) செலஸ்தியர்

05. எருசலேமுக்கு அருகே “அன்றோனியர்” என்னும் மாளிகையை தனது வாசல்தலமாக அமைத்துக் கொண்டவர்
    1) மாமன்னர் அலக்சாண்டர்
    2) தாவீது
    3) அந்தியோக்கு எபிப்பான்
    4) ஏரோது அந்திப்பாஸ்
    5) பெரிய ஏரோது அரசன்

06. மோசேயின் போதனைக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்ட மரபு
    1) J
    2) E
    3) D
    4) P
    5) P, D

07. திருவிவிலியத்தின் நோக்கம் பற்றி தூய அகுஸ்தினாரின் கூற்றாக அமைவது
    1) ஒழுக்கமும் நற்பயிற்சியும் கொண்ட கிறிஸ்தவர்களை உருவாக்குவது.
    2) ஒழுக்கம் கொண்ட மானிடரைப் படைப்பது.
    3) புத்திசாலி ஜீவிகளை உருவாக்குவது.
    4) ஒழுக்கமும் நம்பிக்கையும் கொண்ட சமுகத்தை உருவாக்குவது.
    5) ஞானமும் நற்பயிற்சி கொண்ட சமூகத்தை உருவாக்குவது.

08. உடன்படிக்கையை மீறுதல் மீளவும் நாடு கடத்தப்படுவதற்கு காரணமாகும் என எச்சரிக்கை விடுக்கும் மரபு
    1) P
    2) J
    3) E
    4) D
    5) Q

09. சாகா வரத்தைக் குறிக்கும் மத்திய தரைப்பிரதேசங்களின் (பபிலோனிய) அடையாளமாக விளங்கும் மரம் யாது?

1) நித்திய ஒளியின் மரம் 2) பாவத்தின் மரம்
3) விடுதலையின் மரம் 4) நன்மை தீமையை பகுத்தறியும் மரம்
5) வாழ்வுதரும் மரம்

10. பெத்தலேகம் என்னும் எப்ராத்தா என்ற ஊரில் மெசியா பிறப்பார் எனக்கூறிய இறைவாக்கினர் யார்?

1) எசாயா 2) மீக்கா 3) யோவேல் 4) ஏரேமியா 5) தானியேல்

11. வாழ்வின் பொருளை அதிலுள்ள பிரச்சனைகள் உலகம் பற்றிய சிந்தனைகளோடு விளக்கம் தரும் ஞானம்

1) குடும்ப ஞானம் 2) அரச சபை ஞானம் 3) எபிரேய ஞானம்
4) ஆன்மீக ஞானம் 5) அன்றாட வாழ்வு பற்றிய ஞானம்

12. உரோமைய ஆட்சியின் கீழ் யூதர்கள் இருந்த போதும் சமயச்சட்டக் கோவைக்கேற்ப சமயப் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கும் யூதரின் உயர் நீதிமன்றம்

1) மத்திய சபை 2) சட்டசபை 3) பக்திக் சபை
4) பொதுச் சங்கம் 5) செனத்திரின் சபை

13. சட்டப்படி இல்லாத மற்றும் தகைமையற்ற குருத்துவத்தின் வழியாக ஆலயம் அசுத்தமடைந்துள்ளது எனக் கூறி ஆலயம் மற்றும் குருத்துவம் ஆகிய இரண்டையும் ஏற்றுக்கொள்ள மறுத்த குழுவினர்

1) பபிலோனியர் 2) மறைவல்லுநர் 3) எஸ்சேனியர்
4) சதுசேயர் 5) குருக்கள்

14. A – "நான்", "நானே" என யேசுவின் சுய வெளிப்படுத்தல் கூற்றுக்களைக் கொண்டது

B – மீட்பு என்பது முழு உலகிற்கும் உரித்தானது என்ற எண்ணக்கருவை முன்வைத்தார்.

C – விசேடமாக யூத மக்களை விளித்து எழுதினார்

D – ஒரு வைத்தியரின் அனுபவத்தோடு யேசுவின் குணப்படுத்தல் அனுபவங்களை முன்வைத்தார்.

இங்கு லூக்கா நற்செய்தியின் இயல்புகளை விபரிக்கும் விடயங்கள்.

1) B, D 2) A, B 3) B, C 4) A, C 5) C, D

15. ஆரம்ப காலத்தில் "அப்போஸ்தலர் கைநூல்" என ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் நற்செய்தி.

1) லூக்கா நற்செய்தி 2) மாற்கு நற்செய்தி 3) திருத்தூதர்பணி
4) மத்தேயு நற்செய்தி 5) யோவான் நற்செய்தி

16. கடுகு விதை மற்றும் புளிப்புமாவு பற்றிய உவமைகளின் முக்கிய கருத்தாய் அமைவது

1) இறையாட்சி 2) திருச்சபை வளர்ச்சி 3) மீட்பு
4) கிறிஸ்துவின் வாழ்வு 5) இரண்டாம் வருகை

17. "ஏலி ஏலி லெமா சபத்தானி" இதன் பொருள்

1) "தாகமாய் இருக்கிறது"

2) "என் இறைவா என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்"

3) "என் ஆவியை உம் கையில் ஒப்படைக்கின்றேன்"

4) "எல்லாம் நிறைவேறிற்று"

5) "இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் இவர்களை மன்னியும்"

18. கிறிஸ்துவின் பெயரை பிற இனத்தவருக்கும், அரசர்களுக்கும், இஸ்ராயேல் மக்களுக்கும் கொண்டு செல்வதற்கு இறைவனால் தேர்தெடுக்கப்பட்ட கருவியாக செயல்பட்டவர்

1) பேதுரு 2) ஸ்தேவான் 3) ஆபிரகாம் 4) பவுல் 5) மீக்கா

19. சபையில் புதிதாக இணையும் பிற இனத்தவர் விருத்த சேதனம் செய்ய வேண்டுமா? என்பதற்கான தீர்வினை தேடுவதற்காக கூட்டப்பட்ட சங்கம்

1) எபேசு பொதுச்சங்கம் 2) காத்தேச் சங்கம் 3) எருசலேம் சங்கம்

4) நிசேயா பொதுச்சங்கம் 5) திரிதெந்தின் பொதுச்சங்கம்

20. மசிதோனியாவின் முக்கிய நகரமும், உரோமைய குடியேற்ற நாடு என்றும், பெரும்பாலான யூத மக்கள் வாழ்ந்த நகரம் என்றும் அழைக்கப்பட்டது நகரம்

1) பிசிதியா 2) பாப்போ 3) செலுக்கியா

4) எதென்ஸ் 5) பிலிப்பி

(20x1=20 புள்ளிகள்)

❖ **பகுதி (I) இல் இரண்டு வினாக்களையும் பகுதி (II) இல் இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக**

## பகுதி I

*01.* *1)* செழும்பிறையினுள்ளே காணப்படும் பழைமையான முக்கிய நாகரிகங்கள் 2 எழுதுக? *(2 புள்ளிகள்)*

*2)* திருவிவிலியம் ஏனைய நூல்களிலிருந்து வேறுபடுவதற்கு காரணம் 2 எழுதுக? *(4 புள்ளிகள்)*

*3)* எகிப்திய அரசனான இராம்சேஸ் இஸ்ராயேல் மக்களின் நிமித்தம் பயந்தமைக்குக் காரணம் மூன்று தருக. *(6 புள்ளிகள்)*

*4)* தூய பவுலின் இரண்டாவது மறைத்தூதுப் பயணத்தின் போது பிலிப்பியில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள் நான்கு தருக. *(8 புள்ளிகள்)*

*02.* *1)* யூத மக்கள் தமது அன்றாட வாழ்வில் பயன்படுத்திய நாணயங்கள் 2 தருக. *(2 புள்ளிகள்)*

*2)* வரிதண்டுவோரை யூத மக்கள் நிந்தனைக்குரியவர்களாகவும், இனத்துரோகிகளாகவும் கருதக் காரணங்கள் இரண்டு தருக. *(4 புள்ளிகள்)*

*3)* பரிசேயர் யேசுவின் பணிவாழ்வின் போது அவரில் முன்வைத்த முறைப்பாடுகள் மூன்று தருக. *(6 புள்ளிகள்)*

*4)* பரிசேயரின் வாழ்க்கை முறையில் விசேடமாக இனங்காணக் கூடியதாக இருந்த பண்புகள் நான்கு தருக. *(8 புள்ளிகள்)*

*03.* *1)* தூய பவுலின் முதலாவது மறைத்தூதுப் பயணத்தில் பயணத்தோழர்களாக இணைந்து கொண்டவர்கள் இருவரின் பெயர்களைத் தருக. *(2 புள்ளிகள்)*

*2)* யேசு ஒரு ஆயனின் கடமைகளாக வலியுறுத்தும் விடயங்கள் 2 தருக. *(4 புள்ளிகள்)*

*3)* மனிதனுடைய பாவத்தின் வீழ்ச்சியின் காரணமாக முறிவடைந்த உறவுகள் மூன்றினை எழுதுக? *(6 புள்ளிகள்)*

*4)* குலமுதுவர்கள் வழியாக மக்கள் பெற்ற சேவைகள் நான்கு தருக. *(08 புள்ளிகள்)*

## பகுதி II

*04.* *1)* ஜெருசலோம் பொதுச் சங்கம் கூட்டப்பட்டதன் காரணத்தையும், அதன்மூலம் எடுக்கப்பட்ட தீர்மானங்களையும் தந்து விளக்குக. *(2 புள்ளிகள்)*

*2)* இன்றைய நிலையில் திருச்சபை Covid – 19 நிலமையில் மக்களை நம்பிக்கையில் உரமூட்டி துளிர்விடச் செய்யும் செயற்பாடுகளை தந்து விளக்குக. *(10 புள்ளிகள்)*

*05.* *1)* இறை ஏவுதலின் வகைகள் மூன்றையும் குறிப்பிட்டு அவை பற்றி விளக்குக. *(10 புள்ளிகள்)*

*2)* திருமுழுக்கின் மூலம் திரு அவையின் உறுப்பினரான நாம் இன்று திரு அவை எதிர்நோக்கியிருக்கும் மிகப்பெரும் சவால்கள் மத்தியில் கிறிஸ்தவ விசுவாசத்தை பாதுகாக்க உமக்குள்ள பொறுப்புக்களை விளக்குக. *(10 புள்ளிகள்)*

*06.* *1)* தூய பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் *(1 கொரி 13 : 1–13)* அன்பு பற்றி முன்வைக்கும் விடயங்களை விளக்குக. *(10 புள்ளிகள்)*

*2)* மறைத்தூதுப் பணிக்கு ஆயத்தம் செய்வோரிடம் இருக்க வேண்டியப ண்புகளை விளக்குக. *(10 புள்ளிகள்)*

*07.* *1)* திருத்தூதர் பணி நூலின் இயல்புகள் பற்றி விளக்குக. *(10 புள்ளிகள்)*

*2)* தூய பவுலின் வாழ்விலிருந்து கிறிஸ்தவர்களாகிய எமக்கு கிடைக்கும் முன்மாதிரிகைகள் பற்றி விளக்குக. *(10 புள்ளிகள்)*